Regd. No. M. 4593.

"KUDI ARASU"

12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

மாலை 18 } [illegible], 30-6-1945 ஆனி-மீ 17உ { மணி 38

## "ஒரு சந்தேகம்"

சித்திரபுத்திரன்

புது பக்தன்:- சிவனுக்குத் திருப்பணி செய்பவர்கள் அதாவது "கல்லினால் கோவில் கட்டுபவர்கள், கும்பாபிஷேகம் செய்பவர்கள் பழைய கோவில்களை ரிப்பேர்செய்து புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்பவர்கள் ஆகிய எல்லோரும் கைலாயத்தில் சிவபெருமானுடன் இரண்டறக் கலந்து கற்பகோடி காலம் வாழ்வார்கள்" என்று சாஸ்திரங்கள் சொல்லுவதாக பெரியோர்கள் சொல்லுகிறார்களே இது மெய்தானா?

பழைய பக்தன்:- அட பயித்தியமே எந்த மடையன் சொன்னான் உனக்கு இந்தப்படி?

பு. ப:- ஏனைய்யா! சந்தேகம் கேட்டால் கோபிக்கிறீர்கள். விபரம் சொல்லுங்கள்.

ப. ப:- இதற்கு சந்தேகம் என்னப்பா வந்தது? சொல்லுகிற மடையனோ அயோக்கியனோ சொன்னால் கேட்கிறவனுக்கு புத்தி வேண்டாமா? ஒருவனாவது மலத்தைக் கையில் வைத்துக் கொண்டு "அய்யா இது ஜவ்வாது" என்று சொன்னால் மூக்கு நன்றாய் இருக்கிற ஒருவன் அதில் சந்தேகப்பட்டு "ஏனய்யா இது ஜவ்வாதா" என்று கேட்பானா?

பு. ப:- இது என்ன உபமானமய்யா எனக்குப் புரியவில்லையே

ப. ப:- அட முண்டமே இந்த உலகத்தில் சிவனுக்குக் கல்லில்கோவில்கட்டித் திருப்பணிசெய்து கும்பாபிஷேகம் செய்து, சிவனுக்குக் கல்யாணம், [illegible] எல்லாம் பண்ணி, தினம் 3 வேளை, 6 வேளை பொங்கல் படைப்புக்கு பூமி எழுதிவைத்த பக்த சிகாமணிகளை இந்த உலகத்திலேயே இவற்றையெல்லாம் சிவன் நேரில் கண்ணில் கண்டும்கூட அப்படிப் பட்டவனைத் தன் கிட்டவந்து தொட்டுக்கும்பிடவோ, தன் பக்கத்தில் நின்று பிரார்த்தனை செய்யவோ அந்த சிவன் சம்மதிப்பதில்லையே. அப்படி இருக்க இவைகளையெல்லாம் நேரில் காணமுடியாத இடமாகிய கைலாயத்தில் இருக்கும் சிவன் திருப்பணி செய்தவனைக் கிட்டச் சேர்க்குமா? இவன் செய்த திருப்பணி சங்கதி சிவனுக்கு எப்படித் தெரியும்? தெரிந்தாலும் இங்கே சேர்க்காத சிவன் அங்கே சேர்க்குமா? அதுவும் இங்கு கல்லில்இருக்கும் சிவன் சேர்க்கவில்லை என்றால் ஜீவனா இருக்கும் சிவன் சேர்க்குமா? இது தெரியாமல் "ஒரு சந்தேகம்" என்கிறாயே சந்தேகமா மடத்தனமா?

பு. ப:- அய்யய்யோ நீங்கள் சொல்லுவது பார்க்கிறதுக்கு நிசமாய் இருந்தாலும் அது உண்மையல்ல. ஏனென்றால் இங்கு இருக்கும்பார்ப்பனர்கள் அப்படிச்செய்து நம்மை அவமானப்படுத்துகிறார்கள். சிவபெருமான் அப்படிப் பட்டவரல்லவே.

ப. ப:- அடமடக் குன்றே பார்ப்பனர் அப்படிச் செய்யவில்லை, அவர்கள் ரொம்பவும் நல்லவர்கள், சிவபெருமான் கூடவே கைலாயத்தில் இருந்து இங்கு வந்தவர்களும் பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர்களுமாவார்கள். சாஸ்திரங்கள் அந்தப்படி அதாவது நிந்தமக்களை கிட்ட நெருங்கவிடக் கூடாது என்று சொல்லுவதனால் பார்ப்பனர்கள் அப்படிச் செய்கிறார்கள். ஆதலால்பார்ப்பனர்கள் மீது குற்றம் சொல்லித் தப்பித்துக் கொள்ளவோ சிவனைக் காப்பாற்றவோ பார்க்க வேண்டாம்.

பு. ப:- அய்யய்யோ அந்த சாஸ்திரம் கூட இந்தப் பார்ப்பனர்கள் எழுதியதுதானே. இதற்கு சிவன் என்ன செய்வார்?

ப. ப:- அட கலிகால் உருண்டையே அந்த சாஸ்திரத்தை நீ எப்போதாவது பார்த்தாயா? நான் பார்த்து இருக்கிறேன். அந்த நீ சொல்லும் சாஸ்திரம் பார்வதிக்கு பரமசிவனே நேரில் சொன்னது. அதை நந்தி கேட்டிருந்து நமக்குச் சொல்லப்படுவதாகும். அதிலேயே அப்படி இருக்கிறது. ஆதலால் சாஸ்திரத்தில் அவநம்பிக்கை வைக்கவேண்டாம்.

பு. ப:- அய்யா நீங்கள் வேண்டுமென்றே பேசுகிறீர்கள்போல் தெரிகிறது. பார்ப்பனர் தங்கள் பிழைப்புக்கும் மேன்மைக்கும் எழுதிவைத்த ஏடுகளை எடுத்துக் கொண்டு அதை சாஸ்திரமென்றால் செல்லுமா? அப்படி எந்தக் கடவுளாவது சொல்லி இருக்குமா என்ன அய்யா இப்படிப் பேசுகிறீர்கள்?

ப. ப:- நான் பேசுவது தப்பு என்கிறாய்—அப்படியானால் நீ யோசித்துப்பார். என்னை எதற்கு ஆக "ஒரு சந்தேகம்" என்றுகேட்க வந்தாய்? சாஸ்திரங்களில் சொல்லப்படுவது உண்மையா என்று தானே கேட்க வந்தாய்?

பு. ப:- ஆம்.

ப. ப:- இப்போது நீ குறித்துக் கொண்டு வந்த சாஸ்திரம் பொய்யா பொய்யா என்று தெரிந்துகொண்

ரோஜா முத்தையா

டாயா? அதை யார் என்ன காரியத்திற்கு எழுதினார்கள் என்றும், அதை நம்பலாமா வேண்டாமா என்றும் தெரிந்துகொண்டாயா? சாஸ்திரம் என்றால் "கல்லால் கோவில் கட்டினவர் கற்ப கோடி காலம் கைலாயத்தில் சிவனோடு கலந்திருப்பார்கள்" என்று எழுதப்பட்டிருப்பதும் "சூத்திரர்கள் கோவில் கட்டினவர்களாயிருந்தாலும், (சிவனையே)செய்து வைத்தவர்களாயிருந்தாலும் சிவனைத் தொட்டுவிட்டால் உள்ளே நுழைந்துவிட்டால் மகா பாவம் என்பதல்லாமல் சிவனும் தீட்டுப் பட்டுவிடுவான்" என்று எழுதப் பட்டிருப்பதும் ஒன்றுதான். இந்த இரண்டும் ஒருவன் எழுதியது தான்.

பு. ப:- சரிசரி இப்போது தெரிந்துகொண்டேன்.

ப. ப:- அப்படி வாப்பா! இப்போது புரிந்ததா என் "உதாரணம்"

பு. ப:- புரிந்தது புரிந்தது எல்லாம் புரட்டு என்பதும் இந்தத் திருட்டுப்பசங்கள் எழுதினதென்பதும் நன்றாய் புரிந்தது!

ப. ப:- அப்படியே! உனக்கு அறிவு இருக்கிறது, கண் இருக்கிறது, அனுபவம் இருக்கிறது. இவ்வளவையும்விட்டுவிட்டு "மனுஷனுக்கும் பிறக்காத" ஜடமாய் இருந்திருக்காதே, எவனோ ஒரு மடையன் எப்போதோ எதற்காகவோ சொன்னதை, நம்பினதை எடுத்துக்கொண்டு என்னிடம் வந்து 'பொய்யா', 'மெய்யா', 'சந்தேகம்' என்கிறாயே? இப்படித்தானே உலகத்தில் பெரும்பாலோர் இதுபோல் ஒன்றுக்கொன்று முரணான எத்தனையோ காரியங்களை நம்பியும், சந்தேகப்பட்டும், பேராசைப்பட்டுக் மடையர்களாக ஆகிவிட்டார்கள். போ இனிமேலாவது இதுமாதிரி காரியத்துக்கு "சந்தேகம்" கொள்ளாதே.

பு. ப:- சரி புத்திவந்தது போய் வருகிறேன்.

ப. ப:- போய்த் தொலை.

---

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேட்டையின் முக்கியவீதிகளிலொன்றில் ஒரு இடத்தைப் பார்த்து கழகத்தைத்திறவி வேலைகள் செய்வதென்றும், சேலம் மாகாண மாநாட்டை இக்கழகம் முழுமனதுடன் ஆதரிக்கிறது என்றும், ஷை மாநாட்டுத் தீர்மானங்களுக்கு விரோதமாய் ஒரு கமிட்டி நிறுவி சென்னையில் ஒரு மாநாடுகூட்டிய சுயநலமிகளைக் கண்டிப்பதுடன் அவர்கள் செய்கையை சர்க்காரும் பொதுமக்களும் நன்கு உணரும்படியான தீவிர நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு கட்சித் தலைவரைக் கேட்டுக்கொள்கிறதென்றும்; பாரதிதாசன் நிதிக்காக இக்கழகச் சார்பில் ஒரு பணமுடிப்பு அனுப்புவதென்றும் தீர்மானித்துள்ளது.

* *

திண்டுக்கல்லில் 20-6-45 அன்று இவ்வூர் எம். எல். வி. ஜி. அவர்கள் வாணிப நிலையத்தில் தோழர் தமமணி இராசன் தலைமையில் திராவிடர் கழக அமைப்புக் கூட்டம் நடத்தப்பட்டு தோழர்கள் எம். ஆர். மத்திரன், பி. பி. சந்திரன், ஜி. இலட்சுமணன், இல. வீராசன், குருசாமி முதலியோர் முறையே, தலைவர் துணைத்தலைவர், பொருளாளர், செயலாளர் துணைச் செயலாளராகத் தேர்தெடுக்கப்பட்டனர். மற்றும் அனுபவமுள்ள 10 பிரமுகர்களை கிளைக் உதவியினர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டதுடன் அபிமானமுள்ளவர்களிடம் நிதி திராவிடர்கழகத்துக்குத்திரட்டி முழுமூச்சாக வேலைகள் செய்யவும் கூட்டங்கள் மாநாடுகள் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டு செயலாளர் வீராசன் நன்றி கூறுதலுடன் இனிது முடிந்தது.

* *

13-6-45 இணக்கனூரில் தோழர்கள் கே. சுப்பையன் சின்னச்சாமி, பிச்சையப்பன் பண்ணையக்காரர் முதலியோர் ஆதரவில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் வீராசன் 'திராவிடமும் ஆரியமும்' என்பதுபற்றி விளக்கிப்பேசினார். சீக்கிரம் திராவிடர் கழகம் இவ்வூரில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது, எம். முத்துச்சாமி நன்றி கூறினார்.

* *

பெரம்பூர் திராவிடர் கழகக் கூட்டம் 20-6-45-ந் தேதி தோழர் ச. சண்முகம் தலைமையில் கூடியது. ஷை கழகச் செயலாளர் தோழர் கு. சிவசாமி அவர்களின் தாயார் முருகம்மாள் இயற்கை எய்தியமைக்கு வருந்துவதாகவும், ஷை கழகத்தின் பெயரை "பெரம்பூர் வட்டக் கழகம்" என பெயர் மாற்றுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* *

பொன்மலை திராவிடத் தொழிலாளர் கழகம் 18-6-45-ல் தோழர் மாருதி கலியாணசுந்தரம் அவர்கள் தலைமையில் அடங்கியது. தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கொடியேற்றினார். குடந்தை தோழர் எஸ். கே. சாமி ஷை கழகத்தைத் திறந்து வைத்தார். அதுசமயம் சர்க்கார் நிர்வாகத்திற்குள் வந்திருக்கும் S. I. R. & M. S. M. ரயில்வேக்களுக்கு "பெரிய திராவிடநாட்டு ரயில்வே" என்று பெயர் வைக்குமாறு கேட்டுக்கொள்வதாகவும், பொன்மலை காலனிக்கும் மேலக்கல்கண்டார்க்கும் இடையிலுள்ள சுவரில் தொழிலாளர்களின் போக்குவரத்துக்கு ஒரு வாயில் வைக்கும்படி ரயில்வே நிர்வாகிகளையும் சர்க்காரையும் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* *

19-6-45-ந் தேதி தோழர் ஏ. ஆர். அப்பாய் தலைமையில் கூடிய சேலம் பொன்னம்மாப்பேட்டை ஜண்டின் தியாகராயர் வாலிபர் சங்கக் கமிட்டிக் கூட்டத்தில் சென்ற ஆண்டின் வரவு செலவுக் கணக்கு ஒப்புவிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. புது ஆண்டுக்குத் தோழர்கள் எஸ். எஸ். குருவையா தலைவராகவும், ஏ. ஆர். அப்பாய் உபதலைவராகவும், பி. வி. ராசு செயலாளராகவும், கே. பி. சின்னசாமி உதவி செயலாளராகவும், ஏ. எஸ். அருணாசலம் பொக்கிஷதாராகவும், 11 பேர் கமிட்டி அங்கத்தினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். பின்னர், ஷை சங்கத்தின் பெயரை "தியாகராயர் திராவிடர் கழகம்" என்று மாற்றுவதென்றும், சென்னையில் கூடிய போலி மாநாட்டு நடவடிக்கைகளைக் கண்டித்தும், வேவல் திட்டம் திராவிடமக்களை இகழ்ச்சிக்கு இழுப்பதாகுமென்றும், ஷை சங்கத்தில் பொதுமக்களின் நன்மைக்காக கிணறு ஒன்று வெட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

o o

போளூர் தாலுகாவில் வாணி வட்டம் திராவிடர் கழக சார்பில் வில்லை அம்மன் கோயிலுக்கெதிரில் 18-6-45-ந் தேதி வில்லை இராவணன் பி.ஏ., கருப்பு மாணவர் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ஏ. பி. சனார்த்தனம் எம்.ஏ., திருவத்திபுரம் தேவராசன் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் அண்ணாமலைப் பிள்ளை அவர்களின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. தோழர் இளங்கோவன் நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

* *

நடராசபிள்ளை சாவடி திராவிடர் கழகத் திறப்புவிழா 10-6-45-ந் தேதி காலை தோழர் வி. எஸ். ராசன் தலைமையில் நடந்தது. தோழர் இளஞ்செழியன் கொடியேற்றுவித்தார். தோழர் இளம்வழுதி கழகத்தைத் திறந்துவைத்தார். பெரியார் படத்தைத் தோழர் மா. இராமலிங்கம் திறந்து வைத்தார். பிறகு தோழர் சாமிநாதன் "நமது கடமை" என்பது பற்றிப் பேசினார்.

ரோஜா முத்தையா

# திருச்சி மாவட்ட [ஜில்லா] ஜஸ்டிஸ் கட்சி மாநாடு

## தோழர் சங்கரன் வரவேற்புரை

திருச்சியில் 17-6-45ந் தேதி நடைபெற்ற திருச்சி மாவட்ட (ஜில்லா) ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் வரவேற்புத் தலைவர் திருச்சி நகரசபை அங்கத்தினர் தோழர் சங்கரன் அவர்கள் ஆற்றிய வரவேற்புரை:

பெரியார் அவர்களே!

தோழர்களே!!

திருச்சி ஜில்லா 16-வது திராவிட கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாட்டின் வரவேற்புக் கழகத்தின் சார்பாக உங்கள் அனைவரையும் வணக்கத்துடன் வரவேற்கிறேன்.

சென்ற ஓரிரு மாதங்களுக்கு முன் நான் சென்னையில் நடந்த சென்னை மாவட்டத் திராவிட கழக (ஜஸ்டிஸ்) மாநாட்டில் நான் தலைமை வகித்தபோது, என் தலைமையுரையில் கூறியதே போன்று தற்போதைய அரசியல் நடவடிக்கைகளில் அதிக கவனஞ் செலுத்துமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஆரியர்கள் ஆடும் ஆட்டங்களைவிட, நேற்றுவரை நம் தலைவர்கள் நம் தொண்டர்கள் நம் பத்திரிகைகாரர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொண்டிருக்க நேர்ந்தவர்களின் திருவிளையாடல் மிகுந்த விஷமத்தனம் கொண்டதாயும், அபாயமானதாயுமிருக்கிறது. சேலம் முடிவுக்குப் பின்னர் பெரியார் அவர்கள் தலைமையில் உத்தியோகவேட்டை ஆட முடியாதென்று கண்டவர்கள் இப்போது ஒருங்கு கூடிக்கொண்டு தங்களை ஒரு கட்சியாகக்காட்டி சர்க்காரை ஏமாற்ற முயற்சிக்கிறார்கள். சர்க்கார் ஏமாறமாட்டார்கள். ஜஸ்டிஸ் கட்சி என்றாலே பார்ப்பனரல்லாத மக்களின் (திராவிடர்களின்) பெயரைச் சொல்லி சந்தர்ப்பமும்—வசதியுமுடையவர்கள் மந்திரி பதவிகளுக்கும், மற்ற உத்தியோகங்களுக்கும் பார்ப்பனரின் (ஆரியரின்) போட்டியை தவிர்த்துக்கொள்ளுவதென்றுதான் இன்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதை நம்மக்கள் விரும்பவில்லை என்பதை இன்றும் தெரிந்துகொள்ள முடியாது மூளை வலிமையற்றிருக்கிறார்கள். 1937ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் காங்கரசுக்கு பெருவாரியான வெற்றி என்பதோடு, நம்மந்திரிகள் முக்கியத்தலைவர்கள் மண்ணைக் கவ்வி வீழ்ந்தார்கள் என்பதன் அர்த்தம் என்ன? மொத்த ஓட்டு எண்ணிக்கையில் பெருவாரியான ஓட்டுக்கள் நம் மக்களுக்கிடையதல்லவா? ஓட்டர்கள் ஏன் இவர்களை விரும்பவில்லை.

ஆனால் உத்தியோகம் என்பதையே அறவே வெறுத்து துறவுகொண்டிருக்க வேண்டுமென்றும் நான் கூற வரவில்லை. ஓரளவுக்காவது நம் லட்சியத்தை அடைய முடிகிறபடி சௌகரியமிருந்தாலல்லாது வெறும் தவிப்பட்டவர்கள் சுயநலத்துக்கு கூடாதென்பதுதான். முஸ்லிம் லீக் அதன் லட்சியத்தை யடைய-பாகிஸ்தான் அடைய சாதகமாய் எப்படி மாகாணங்களில் உத்தியோகங்கள் ஏற்க ஆசைப்படுகிறதோ இதேபோல்காங்கரசும் எப்படி ஆசைப்படுகிறதோ அதேபோல் நாம் உத்தியோகமேற்றுக்கொள்ளுவதும் இருக்கவேண்டும். ஆனால் நம் போலித் தலைவர்களுக்கு திராவிட இனமும் பிடிக்கவில்லை; திராவிட நாடும் சம்மதமில்லை; மற்றெதற்கு இவர்கள் பதவி பெற வேட்டை ஆடுவது? 25 ஆண்டுகள் வரை இம்மாகாணத்தின் அரசியலை ஏற்று நடத்தினோம் என்று பெருமைப் படுகிறவர்களும், வருடக் கணக்கில் மந்திரி வேலை பார்த்தவர்களும், மற்றும் வெளி நாடுகள் சென்று உலகக் கொள்கைகளைப் பற்றி பேசி பாராட்டுப்பெற்றவர்களும் கடைசியாக இன்று என்ன முன்னேற்றத்தை அடைந்து விட்டார்கள்? தங்களை, நாகூசாமல் 'இந்து' என்றும், அதனால் பார்ப்பனருக்கு அடிமைதான் என்றும், இனி மேல் ஆரியர்கள்—திராவிடர்கள் என்று பிரிக்கமுடியாததானபடியால் ஆரியரின் வைப்பாட்டி மகனாகச் சொல்லப் படும்படியாய் இருந்து செத்து மடிவதைத் தவிர வேறு வழியில்லை என்று நாகூசாமல்—தங்கள் படிப்பு-யோக்கிதை இவைகளைக் கூட எண்ணிப்பார்க்க முடியாமலும், ஒப்புக்கொள்ளுவதைத் தவிர வேறு என்ன முன்னேற்றம் கண்டார்கள்? இந்த முடிவுக்கா இத்தனை ஆண்டுகள் நம் மக்கள் பெயரால் இவர்கள் உத்தியோகம் பார்த்திருக்கவேண்டுமோ? மேலும் இதற்காகவே இவர்களுக்கு ஜஸ்டிஸ் கட்சி வேண்டுமோ? நம் மக்கள் இப்படிப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கலாமா? அளிப்பார்களா? ஆகையால் இன்று தேசியத் தாசர்களின் துரோகங்களும், பிற நடவடிக்கைகளையும் நமது இனத் துரோகிகள் புரியும் திருவிளையாடல்களைக் கண்டு பிரமாதமாக அஞ்சிவிட வேண்டாமென்பதோடு அவர்கள் காரியத்தில் சற்று எச்சரிக்கையாயிருந்து வரவும் உங்களனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திராவிட கழகத்திற்கு (ஜஸ்டிஸ் கட்சிக்கு) அரசியல் கொள்கையுண்டா? 'அரசியல் ஞானம்' உண்டா என்று இவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பெரியார் 'குடி அரசு' வாயிலாக நல்ல பதிலைத் தந்திருக்கிறார். அரசியலிலிருந்து சமுதாயத்தையோ, சமுதாயத்திலிருந்து அரசியலையோ பிரிக்க முடியாதென்று பெரியார் அவர்கள் கூறியுள்ளது மிகவும் சிந்திக்கவேண்டியதாகும். உயிரினின்று உடலைப் பிரிப்பதும், உடலினின்று உயிரைப் பிரிப்பதும் எவ்வளவு புத்திசாலித்தனமான காரியமோ அத்தகைய புத்திசாதுர்யம் நிரம்பியதாகவே கடைசியாக தோழர் சர். ஆர். கே. ஷண்முகம் அவர்களின் 'அரசியல் ஞான'மும் கூட நமக்குக் காட்சியளிக்கிறது. என்ன விபரீதம்!

எல்லா இலாகாவையும் இந்தியரிடம் ஒப்படைப்பது என்று வைசிராய் பிரபு அவர்கள் கூறிவிட்டபடியால் வடநாடு—தென்னாடு உணர்ச்சி பார்ப்பனர்களிடத்தும் வலுவடையக்கூடுமென்றே எதிர்பார்க்கிறேன். ஆங்கிலேயருக்குப் பதில் வடநாட்டு ஆரியப் பனியாக்களின் முதலாளித்துவ சுரண்டல் கொள்கைக்குக் காங்கரசை நடத்திச் செல்லவேண்டிய தேற்படும்போது தோழர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் சம்மந்தி உறவுக்காகவோ, பிறவற்றிற்காகவோ சம்மதிக்க முடியாது. "ஒரு ராமசாமி நாயக்கர் திராவிடநாட்டை திராவிடர்களே ஆண்டுகொள்ள முடியுமென நம்புகிறார்" என்ற அவரின் சென்னைப் பிரசங்கமும், "தோழர் ராய் ஒரு கட்சியை வைத்து நடத்தும்போது என்னால் ஒரு கட்சியை ஏற்படுத்தி நடத்த முடியாதா?" என்று தூத்துக்குடி பொதுக் கூட்டத்தில் அவர் பேசியிருப்பதும் நாம் மிகவும் சிந்தித்துப் பார்க்கவேண்டிய வார்த்தைகளாகும். புதிய சீர்திருத்தம் முஸ்லீம்களுக்கு நிர்வாக சபையில் 50 சதவிகித ஸ்தானங்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து ஓரளவுக்கு முஸ்லிம்களுக்குப் 'பாகிஸ்தான்' உதயமாகிவிட்டது என்றுதான் கருதவேண்டியதிருக்கிறது. ஆனால் வேவல் திட்டம் பிற அம்சங்களில் நமக்கு ஏமாற்றமுள்ளதேயாகும். ஆகையால் மாகாணங்களில் கூட்டு மந்திரி சபை என்கிறபோது நம் கட்சி என்ன செய்யப்போகிறதென்பதை தலைவர் பெரியார் அவர்கள் ஆராய்ந்து நல்வழி காட்டுவாரென்றும், தோழர் அண்ணாதுரை இம்மாநாட்டை செவ்வனே நடத்திக் கொடுத்து அரிய யோசனை கூறுவார் என்றும் நிச்சயம் நம்புகிறேன். உங்கள் வரவு நல்வரவாகுக என்பதாகப் பேசினார்.

## சென்னை நகர திராவிடர் கழகம்

### வைஸ்ராய்க்குத் தந்தி

சென்னை நகர திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம் ஒன்று 27-6-45-ல் மாலை 6½ மணிக்கு பார்க் டவுன் பிள்ளையார் கோயில் தெரு 11-வது கட்டிடத்தில் நடைபெற்றது. தலைவர் டி. சண்முகம் அவர்கள் வருவதற்கு முன் தோழர் எ.எ. கபாலமூர்த்தி தலைமை வகித்தார். 33 நிர்வாக உறுப்பினர்கள் வந்திருந்தனர். அதுசமயம் கீழ்க்கண்ட தீர்மானம் தலைவர் சண்முகம் அவர்களாலேயே பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியதுடன், வைசிராய்க்கும் தந்தி கொடுக்கப்பட்டது.

"ஆறுகோடி எண்ணிக்கையுள்ள மக்களின் ஸ்தாபனமாகிய திராவிடர் இயக்கத் (ஜஸ்டிஸ் கட்சி) தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களைக் கலந்துகொள்ளாது நிறைவேற்றப்படும் சிம்லா மாநாட்டின் முடிவுகள் திராவிடர்களைக் கட்டுப்படுத்தாது என்பதுடன், அம்முடிவை திராவிடநாட்டு மக்களும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை மே. த. வைசிராய்க்கு இக்கமிட்டி தெரிவித்துக் கொள்கிறது."

அடுத்தபடியாக கீழ்க்கண்ட தீர்மானம் சென்னைக் கவர்னருக்குக் கழகத் தலைவர் டி. சண்முகம் கையெழுத்திட்டு அனுப்பப்பட்டுள்ளது:-

"மே மாதம் 7, 8 தேதிகளில் சென்னை வி. பி. ஹாலில் சர் சண்முகம் அவர்கள் தலைமையில் என். ஐ. என். எப். என்னும் பேரால் நடைபெற்ற போலி மாநாடு, சேலத்தில் நடைபெற்ற ஜஸ்டிஸ் மாநாட்டிற்கு மாறாகவும், கட்சியின் திட்டத்திற்கு முரணாகவும் நடைபெற்றிருப்பதை இக்கமிட்டி கண்டிப்பதுடன், சட்டப்படி அப்போலி மாநாட்டிற்கும் ஜஸ்டிஸ் (திராவிடர்) கட்சிக்கும் யாதொரு தொடர்புமில்லை என்பதோடு, அம்மாநாடு ஜஸ்டிஸ் மாநாடல்ல வென்பதையும் சென்னை சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்கிறது" இத்தீர்மானத்தைத் தோழர் பாலசுந்தரநாயக்கர் பி. ஏ. எல். டி., பிரேரேபிக்க, தோழர் ஜி. மாசிலாமணி ஆமோதித்தார்.

பிறகு மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் ஜூலை முதல்—இரண்டு வாரங்களில் சென்னையின் பல பாகங்களிலும் தொடர்ந்து பொதுக் கூட்டங்கள் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. கமிட்டிக் கூட்டம் இரவு 8½ மணிக்கு முடிவுற்றது.

## குடந்தையில் தோழர் சி. என். எ.

4-7-45 புதன் கிழமை மாலை 6.30 மணிக்கு கும்பகோணம் காங்கேயன் பார்க்கில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் திராவிடநாடு ஆசிரியர் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் திராவிடர்களின் நிலைமை என்பது பற்றிப் பேசுவார்கள். பொதுமக்கள் திரளாக வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கே. கே. நீலமேகம்,
திராவிடர் கழகம், கும்பகோணம்.

## வ. ஆ. திருப்பத்தூர் திராவிடர் கழக அறிக்கை

ஷை திராவிடர் கழகம் ஜில்லா கமிட்டிக் கூட்டம் ஒன்று 15.7-45 ஞாயிறு மாலை 5 மணிக்கு இவ்வூரில் நடத்தவும், அதுசமயம் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றவேண்டி இருப்பதாலும் இதையே அழைப்பாகக் கொண்டு ஜில்லா திராவிடர் கழக கமிட்டி மெம்பர்கள் அனைவரும் வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

எம். ஈடேசம் பிள்ளை, காரியதரிசி: வி. எம். ராசமாணிக்கம், ஆர்கனைசர்.

## கல்வியும் ஷெடியூல்டு வகுப்பாரும்

சென்னை ஜில்லா ஷெடியூல்டு வகுப்பார் பெடரேஷன் காரியதரிசி தோழர் எ. ரத்னம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:

சென்னை நகரத்திலுள்ள ஷெடியூல்டு வகுப்புப் பிள்ளைகளில் பெரும்பாலோர் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்களிலும் எய்டட் எலிமெண்டரி பள்ளிக்கூடங்களிலும் படித்து வருகிறார்கள். இவைகளில் உயர் வகுப்புக்கு மாற்றப்பட்ட விபரம் பள்ளிக்கூடங்கள் விடுமுறைக்குப் பின் திறக்கப்பட்ட பிறகுதான் அறிவிக்கப்படுகிறது. உயர் வகுப்புக்கு மாற்றப்பட்ட பிள்ளைகளுக்கு மிடில் ஸ்கூல்களிலும், ஹைஸ்கூல்களிலும், காலேஜ்களிலும் இடமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அதிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்டவர்களின் நிலை மிகப்பரிதாபகரமானதாயிருக்கிறது. பணக்காரர்கள் எப்படியோ தங்கள் பிள்ளைகளுக்கு இடம் தேடிக் கொள்கிறார்கள். ஷெடியூல்டு வகுப்பாருக்கு இடம் கிடைப்பதில்லை. இதற்கு சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும். பரீட்சையின் முடிவுகள் தாமதமாக வெளியிடப்படுவதால் இத்தகையசங்கடம் ஏற்படுகிறது. அடுத்தபடியாக, கார்ப்பரேஷன் பள்ளிகளிலிருந்தும் எய்டட் ஸ்கூல்களிலிருந்தும் வரும் மாணவர்களை உயர்தரப்பள்ளிகளில் சேர்க்க எடுத்துக்கொள்வதில்லை. வேறு சோதனை வைக்கிறார்கள். இதில் தேறியவர்களைத்தான் சேர்த்துக் கொள்கிறார்கள். இம்முறை ஷெடியூல்டு வகுப்பாருக்குப் பெரும் தீமையை விளைவிக்கிறது. இக்குறையையும் நீக்க சர்க்கார் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

கார்ப்பரேஷன் பள்ளிகளில் தேறிய ஷெடியூல்டு மாணவர்களின் அபிவிருத்தியைப் பற்றிய குறிப்பு ஒன்று தயார் செய்து அனுப்புமாறு கமிஷனர் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு உத்தரவு பிறப்பித்தால், அம்மாணவர்கள் உயர்தரப் படிப்புப் படிக்க மிகவும் உதவியாக இருக்கும்.


தன்மான (சு. ம.) இயக்கம் சாற்றியது என்ன?

ஆக்கியோர்:- கல்விசை ஞானறு ஆசிரியர்
திருவத்திபுரம் மா. தேவராஜன்
விலை 0-2-0
(தனிப்பிரதி வேண்டுவோர் 2¾ அணா தபாற்றலை அனுப்பி பெற்றுக்கொள்க)
வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் தரப்படும்.
இயக்கத்தின் உண்மைக் கொள்கைகளையும் திட்டங்களையும்
தெளிவுபெற விளக்கும் நூல்.
அடுத்த வெளியீடு: தன்மான (சு. ம) இயக்கம் சாதித்தது என்ன?
கிடைக்குமிடம்:-
இலக்ஷ்மி நூல் பதிப்பகம்,
கடைவீதி, திருவத்திபுரம் (N A.)

## உபயதுல்லாவின் அறியாமை (?)

24-6-45-ந் தேதி ஞாயிறு தூத்துக் குடியில் காங்கிரஸ் கட்சி சார்பாக ஒரு கூட்டம் மேலஊர் சம்பந்தர் மடத்துப் பக்கமுள்ள இடத்தில் கூடிற்று. கூட்டத்தில் தமிழ்நாடு கமிட்டி தலைவர் உபயதுல்லா சாகிபு பேசினார். தமது கட்சித் தலைவர்களை ஆகாயமளவு தூக்கிப் பேசி தோத்திரம் செய்தார். இவ்வாறு பேசி வருகையில் திராவிடர் கட்சியையும், வாதத்துக்கு இழுத்தார். காங்கிரஸ் கட்சியார் மந்திரி சபை அமைத்து ராஜாங்கம் நடத்திக் காண்பிக்கையில் ஈ. வெ. ரா. பெரியார் கண்டனத்திற்கெல்லாம் எதிர்த்துக் குழப்பம் செய்தார் என்றும் முன்பு ஒரு சமயம் சென்னைக்கு விபசார ஒழிப்பு மசோதா கொண்டுவந்ததற்கும், எதிர்த்துப் பேசியவர் எனவும் இல்லாததெல்லாம் பேசி வாயளந்தார். நகர் திராவிட கழக அமைச்சர் தோழர் எம். எஸ். சிவசாமி எழுந்து உங்கள் கட்சிக்காகப் பிறரது உண்மை உழைப்பைப் பழிக்கவேண்டாம், உங்கள் வாய்வீச்சு வீரர் சத்தியமூர்த்தி ஐயர்தான் தேவதாசி ஒழிப்பு மசோதாவைக் கண்டித்தார். தேவதாசிகள் நம் நாட்டிற்கு வேண்டியவர்கள்தானா? பதில் சொல்லுங்கள் என்றார். இந்த மதத்தினர்களின் தர்க்கத்தைத் தெரியாத உபயதுல்லா மழுப்பப்பார்த்தார். பின் ஜனங்கள் அமைதிக்காக மகாத்மா காந்திஜீக்கு ஜே என கூப்பாடு போட்டு சபையினர்களும் ஜே போடுங்கள் என்றார். இதைப் பார்த்த கூட்டத்திலுள்ளோர் எள்ள சிரிப்பு சிரிக்கவே பிரசங்கத் தோழர் சாகிபு நடுக்கக் குரலுடன் என் பேச்சில் குற்றம் கண்டால் எதிர்ப்புக் கூட்டம் போடலாம், பலவிதக் கேள்விகள் கேட்டு குழப்புவது புத்திசாலித்தனமல்ல என்று பிரசங்க மாரியை நிறுத்திக்கொண்டார். கூட்டம் பிரிந்ததும் உபயதுல்லா காங்கிரசின் தொண்டனாயிருந்தும் தலைவனாயிருந்தும் மேம்புல் மேய்ந்தாற்போல் பேசும் தம் கட்சியினர் வழக்கம்போல் மழுப்பல் பேச்சு தான் குடியிருக்கிறது என பற்பல விதமாகப் பேசிச் சென்றனர் ஜனங்கள்.

## கவி பாரதிதாசன் நிதி

புரட்சிக் கவிஞருக்கெனத் திரட்டப்படும் நிதிக்குத் தாங்கள், நன்கொடை அனுப்பிவிட்டீர்களா?

இன்றே அனுப்புக! தமிழரின் தன்மானக் காவலனுக்குத் தக்கது செய்யத் தவறாதீர்!

என். கிருஷ்ணராஜ் ரெட்டியார்,
நாமக்கல், P. O, சேலம்.

## வைஸ்ராய்க்கு திராவிட கழகங்களின் தந்திகள்

திருச்செங்கோடு திராவிட கழகத்தார் கீழ்க்கண்ட தந்தியை மே. த. வைஸ்ராய் அவர்களுக்கு 25-6-45-ந் தேதி அனுப்பியுள்ளார்கள்.

"ஜஸ்டிஸ் கட்சி தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் மே. த. வைஸ்ராய் பிரபு அவர்கள் சிம்லாவில் நடத்தும் மாநாட்டின் முடிவு தென்னாட்டிலுள்ள திராவிட மக்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது."

•  •

சேலம் செவ்வாய்ப்பேட்டை திராவிடர் கழகத்தார் 20-6-45-ந் தேதி கீழ்க்காணும் தந்தியை மே. த. வைஸ்ராய் அவர்களுக்குக் கொடுத்துள்ளார்கள்.

"எங்கள் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமியைக் கலக்காமல் சிம்லாவில் மே. த. வைஸ்ராய் அவர்கள் நடத்தும் மாநாட்டின் முடிவு தென்னாட்டிலுள்ள திராவிட மக்களைக் கட்டுப்படுத்தாது."

## பிறப்பு

புதுக்கோட்டை, 'திராவிடநாடு', 'குடி அரசு' முதலிய பத்திரிக்கைகளின் ஏஜண்டும், சுயமரியாதைத் தோழரும், செந்தமிழ்ப் பதிப்பகத்தின் சொந்தக்காரர்களில் ஒருவருமான தோழர் பெரியண்ணன் செட்டியார் அவர்களின் மனைவியார் ஒரு பெண் மகவை ஈன்றதைப் புதுக்கோட்டை அறிவு வளர்ச்சிக் கழகத்தினர் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

## நாகப்பட்டினம் நாகை திராவிட நடிகர் கழகம்

டை நடிகர் கழகத்தாரால் 20-6-45-ந் தேதி "சாந்தா அல்லது பழனியப்பன்" என்னும் நாடகம் தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் தலைமையில் நடிக்கப்பட்டது. விழுப்புரம் தோழர் இஸ்மாயில் அவர்கள் நடிகர் கழகத்தாருக்கு வெள்ளியாலான கேடயமொன்று பரிசாக வழங்கினார். விழுப்புரம் திராவிடத் தோழியர்களின் சார்பாக ரூ 101 கொண்ட பண முடிப்பொன்று டாக்டர் தியாகராஜன் அவர்கள் கொடுத்தார். புதுவை தோழர்கள் எஸ். சிவப்பிரகாசம், பி. இராமலிங்கம் அவர்களால் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. தோழர் கல்யாணசுந்தரம் நடிகர்களை வரவேற்றார். வழக்கறிஞர் சு. பெருமாள் நாடகத்தைத் துவக்கிவைத்தார். அது முதல் நாடகம் வெற்றிகரமாக நடந்து வருகிறது.

## தமிழ்நாடு திருவள்ளுவர் தொண்டர் மாநாடு

டை மாநாடு 8-7-45-ந் தேதி திருச்சி டவுன் ஹால் கட்டிடத்தில் கரந்தை கவியரசு தோழர் ஆர். வேங்கடாசலம் பிள்ளை தலைமையில் நடைபெறும். இராவ்சாகிப் எம். கே. அனந்தர் பி. ஏ., பி. எல்., மாநாட்டைத் திறந்துவைப்பார். தோழர்கள் புலவரேறு அ. வரதநஞ்சைய பிள்ளை, வித்வான் க. வெள்ளைவாரணர், மு. இராசாக்கண்ணனார் எம். ஓ. எல்., கே. எஸ். காஞ்சனமாலையம்மாள் ஆகியோர் அரிய சொற்பொழிவுகள் ஆற்றுவர் என மாநாட்டின் செயலாளர்கள் அறிவிக்கின்றனர்.


ஜப்பானியரை ஒழிக்க!

ரேடியோ செய்திப்படி, நேசப்படைகள்,
நாளொன்றுக்கு ஒரு டிவிஷன் வீதம்
மேற்கிலிருந்து கிழக்குநோக்கி வந்துகொண்டிருக்கிறது.

★

இதனால்
துருப்புகளின் சௌகரியங்களுக்குத் தேவை எவ்வளவு
அதிகரிக்கிறது என்பதைச்சற்று எண்ணிப்பாருங்கள்!

ஆகவே
"துருப்புகளின் சௌகரியங்களுக்கு"
என்ற தலைப்பில்

மே. த. கவர்னர்

யுத்த நிதிக்கு
தயவுசெய்து பணம் கொடுத்துதவுங்கள்.

குடி அரசு

1945-ஆ ஜூன்௴ 30௳

## பள்ளிக்கூடத்தின் அவசியம்

இன்று நம் நாட்டில் நம் பிள்ளைகள் படிக்க பள்ளிக்கூடங்களுக்கு தேவை அதிகமாகி விட்டது.

இந்த 4, 5 வருஷங்களாக சண்டை ஏற்பட்ட பிறகும் மேன்மை தங்கிய கவர்னர் சர் ஆர்தர் ஹோப் துரை வந்த பிறகும், பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகள் அதிகமாக ஆகிவிட்டதுடன் அதிகமான எண்ணிக்கையுள்ள பிள்ளைகள் பாஸ்செய்து காலேஜ் வகுப்புகளுக்கு யோக்கியதை உடையவர்களாகவும் ஆகிறார்கள். இந்தப் பிள்ளைகள் பெரிதும் தங்களுக்கு போதுமான பள்ளிக்கூடங்கள் இல்லாமல் தவிக்கின்றார்கள். அதிலும் இவ்வருஷம் அதிகமான தவிப்பு.

சென்றவாரம் வந்த மெயில் பத்திரிக்கையில் சென்னை காலேஜ்களில் படிக்க வரும் பிள்ளைகளின் எண்ணிக்கை அமோகமாய்ப் பெருகிவிட்டது என்றும் அனேக காலேஜ்களில் இடமில்லை என்று வெளியில் பலகை எழுதி தொங்கவிட்டிருக்கிறது என்றும் பிள்ளைகள் இடமில்லாமல் தெருத்தெருவாய் அலைகிறார்கள் என்றும், உதாரணமாக சென்னை பச்சையப்பன் காலேஜுக்கு 600 புதுப்பிள்ளைகள் சேர்க்கவேண்டியதற்கு 2000-விண்ணப்பங்கள் வந்து அப்போதே குவிந்துகிடக்கின்றன என்றும் எழுதி இருக்கிறது. மற்றொரு சேதி 60 பிள்ளைகள் சேர்க்கப்படவேண்டிய B. Com வகுப்புக்கு மாத்திரம் 600 விண்ணப்பங்கள் வந்திருப்பதாகத் தெரிகிறது. இது போலவே மாகாணத்தில் உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களும் நிரம்பிவிட்டதாகவும், காலேஜுக்கு மாத்திரம் பல 1000 கணக்கான பிள்ளைகள் இடமில்லாமல் தவிப்பதாகவும் தெரிகிறது.

இது நாட்டின் கல்வி ஆசைக்கு அறிகுறி ஆனாலும் பிள்ளைகளுக்கு கஷ்டகாலம் என்று சொல்லவேண்டி இருக்கிறது.

வகுப்பு விகிதாச்சாரப்படி பிள்ளைகளை சேர்க்காமல் இந்தக் கஷ்டகாலத்திலும் பார்ப்பனப் பிள்ளைகளுக்கு 100-க்கு 100 பேருக்கு இடம் கிடைத்த பிறகுதான் மற்ற பிள்ளைகளின் நிலை அனேக காலேஜுகளில் கவனிக்கப்படுவதாகப் புகார் வருகிறது. இவற்றுள் கிறிஸ்தவப் பாதிரிகளால் நடத்தப்படும் காலேஜுகளில் பெரிதும் இந்தக் காரியங்கள் தலைசிறந்து விளங்குகின்றன.

இன்று கல்வியானது கல்வி ஸ்தாபனக்காரர்களுக்கு ஒரு வியாபார சாதனம்போல் இருக்கிறது. ஹைஸ்கூல்கள் பெரிதும் நல்ல இலாபத்தில் நடைபெறுகின்றன. பாதிரிமார் காலேஜுகள் பெரிதும் கிறிஸ்தவப் பிரசாரச் செலவுக்கு பணம் சேர்க்கும் ஊற்றுகளாய் விளங்குகின்றன; பார்ப்பன ஸ்தாபனங்களோ பார்ப்பனர்களின் உத்தியோகத்திற்கும் அந்த வகுப்பு பிள்ளைகளின் தனிப்பட்ட நலத்துக்கும் ஒப்பற்ற ஒதுக்கிடமாய் விளங்குகின்றன. மற்றபடி சாதாரண பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கல்வியில் மிக குறைந்த எண்ணிக்கை உள்ள வகுப்புகளைப் பற்றி கேள்வி கேட்பாடு இல்லாமல் இருக்கின்றன.

இந்தக் கஷ்டமும் அக்கிரமும் பரிகரிக்கப்பட யாருக்கும் கவலை இல்லை. சண்டையில் பணம் தேடினவர்கள் இந்தத் துறையில் சரிவரக் கவலை செலுத்தாமல் கோவில், உற்சவம், கலியாணம், கருமாதி முதலிய காரியங்களில் கவலை செலுத்துகிறார்கள்.

படித்த கூட்டம், பட்டம், பதவிக்கு அலைகின்றார்கள்; பணக்காரக் கூட்டம் மேலும் கொள்ளை அடிக்கத்திரிகிறார்கள். நாட்டு மக்களின் முக்கியமான தேவை, குறை ஆகியவைகளைப் பற்றிக் கவலை கொள்ளுகிறவர்கள் மிக மிகக் குறைவாகப் போய் விட்டது.

இன்றைய இந்த நிலையில் திருப்பதி வெங்கிடாசலபதிக்கு 10 லக்ஷ ரூபாயில் கிரீடம் செய்யப்பட்டு அதைச் சூட்ட நாள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நம்ம பிரபுக்களும் மதத் தலைவர்களும் மத இலாக்காக்காரர்களும் சர்க்காராரும் இந்த நிலையில் இருக்கிறார்கள் என்றால் நம் அறிவற்ற மானமற்ற தன்மைக்கு இதைவிட வேறு சாட்சியம் என்ன வேண்டும்.

இதுதான் இப்படி என்றால், நம் செல்வவந்தர்கள் பலர் தங்கள் மக்களை சாதாரணப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினால் பிள்ளைகளோடுசேர்ந்து கெட்டுப்போகிறார்கள் என்று கருதியும் பெருமையைக் கருதியும் ஐரோப்பிய பிள்ளைகள் படிக்கும் கான்வெண்ட், மான்போர்ட் ஸ்கூல் என்பது போன்ற 'பெருமை'யுள்ள பள்ளிகளுக்கு அனுப்பி மாதம் 1க்கு பிள்ளை 1க்கு 100 ரூ. போல் செலவு செய்கிறார்கள். அப்படிச் செய்தாலும் அதுகளுக்கு சரியான போஷணை பயிற்சி இல்லாமல், பார்வை இல்லாமல் பெரிதும் குடி, சிகரெட்டு மற்ற சில தவறான காரியங்கள் கற்றுக்கொண்டும் மற்ற மக்களையும் இழிவாய் கருதும்படியான மனப்பான்மையு

## வேண்டுகோள்

### தயவுசெய்து உடனே கவனிக்கவும்

சேலம் மாநாட்டுத் தீர்மானப்படி ஜஸ்டிஸ் கட்சிக்கு நம் தமிழ்நாட்டில் அங்கத்தினர்கள்—கழகங்கள், கிளைக் கழகங்கள் ஆகியவை பொது மக்களுக்கு விளங்க ஒரு சிறு குறிப்பு புத்தகம் கம்போசிங் துவக்கப்பட்டிருக்கிறது. ஆங்காங்குள்ளவர்கள் அருள்கூர்ந்து ஒவ்வொரு கழகம், அதன் கிளை கழகக்காரரும், அவ்வக் கழகம்பற்றி அதன் ஜில்லா, தாலூகா, ஊர், நிர்வாக அங்கத்தினர்கள், கழகத்தின் தெளிவான விலாசம், ஆகிய விபரத்தோடு கார்டு உடனே இந்தவாரத்திலேயே அனுப்பும்படி, அவசியம் அனுப்பும்படி வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

# திராவிடர் கழகத்திற்கு
## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

**30-6-45ந் தேதி வரை 33210 அங்கத்தினர்கள் ரூ. 3312—0—0 சந்தா**

ஜூன் மாதம் 30-ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 5906 | 9. சென்னை | 1822 |
| 2. தஞ்சை | 5901 | 10. மதுரை | 1456 |
| 3. சேலம் | 4554 | 11. செங்கல்பட்டு | 900 |
| 4. திருச்சி | 3985 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு) | 216 |
| 5. இராமநாதபுரம் | 2318 | 13 பெங்களூர் | 169 |
| 6. திருநெல்வேலி | 2125 | 14. புதுக்கோட்டை | 95 |
| 7. தென் ஆற்காடு | 1919 | | |
| 8. வட ஆற்காடு | 1844 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 33210 சந்தா ரூ. 3312-0-0

டன்தான் பலர் திரும்புகிறார்கள். இந்தக் குறைபாடுடன் மற்றொரு குறைபாடு அதாவது இருந்தவ மத உணர்ச்சியையும், மதப்படிப்பையும் சர்ச்சுக்கு செல்வதையும் கட்டாயமாகப் புகுத்தப்படுகிறார்கள்.

இவ்வளவு மாத்திரம்தானா என்றால், அங்கு பிள்ளைகளை நடத்துவதிலும் ஐரோப்பிய பிள்ளைகள் என்பவர்களை ஒரு விதமாகவும் மற்ற நம் திராவிடப் பிள்ளைகள் என்பவர்களை ஒரு விதமாகவும் நடத்துகிறார்கள் என்கின்ற புகாருக்கு அளவில்லை, மற்றும் நம் பிள்ளைகளுக்கு அதிகச் செலவும் ஐரோப்பிய சட்டைக்காரப் பிள்ளைகளுக்குக் குறைந்த செலவும் ஆகின்றதாம். காலேஜுக்கு நல்ல இலாபமும் வருகிறதாம். இந்த நிலையில் ஏராளமான பணம் செலவழித்தும் நம் இன மக்களோடு மக்களாய்க் கலந்துவாழ்வதற்கு வசதி இல்லாமல் நாட்டு வாழ்க்கை முறைக்கும் பழக்கமில்லாமல் இருப்பதில் எவ்வளவு மடமை இருக்கிறது என்று யாரும் சிந்திப்பதில்லை.

ஏற்காடு, கொடைக்கானல், ஊட்டி, குன்னூர் முதலிய இடங்களில் உள்ள ஐரோப்பிய பள்ளிக்கூடங்கள் காலேஜுகள் போல், நம் செல்வந்தர்கள் அப்படிப்பட்ட இடங்களில் காலேஜுகள் வைத்து நடத்துவது என்றால் செல்வந்தர்கள் குழந்தைகளும் நல்ல பலனை அடைந்து நம் நாட்டுக்கு, நம் இன மக்களுக்கு ஏற்ற கல்வி, பழக்கவழக்கம், பகுத்தறிவு ஆகியவைகள் பெற்று நம் மக்களுடன் சகோதரத்தன்மையுடன் வாழமுடியும்.

இப்போது புதுப் பள்ளிகள், காலேஜுகள் ஏற்பட கட்டடம் கிடைப்பது கஷ்டம் என்று சாக்கு சொல்லப்படுகிறது. அது சரியான காரணமாக இருக்க முடியாது. கொஞ்சகாலத்துக்கு மாத்திரம் இருக்கும் இடங்களை நெருக்கி உபயோகித்துக்கொள்ள சர்க்கார் அனுமதிக்கவேண்டும். பெரிய கட்டடங்களை பங்களாக்களை சர்க்கார் மக்களிடம் வாங்கிக் கொடுக்கவேண்டும். வாடகை கஷ்டத்தில் ஒரு நல்ல பகுதி சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஏனெனில் இந்தக்காலத்தில் மக்களுக்கு இருக்கும் ஆசையும் செலவழிப்பதில் இருக்கும் உற்சாகமும் இனி ஒன்று இரண்டு வருஷம் பொறுத்தால் இருக்கமுடியாமல் போய்விடும்.

மற்றும் ஈரோட்டைப் பொறுத்த வரை ஒன்றுகூற ஆசைப்படுகிறோம்.

ஈரோடு பெரிய பட்டண (நகர) மாக ஆகிவிட்டது. பெரிய வியாபாரஸ்தலமாகவும், ஜவுளி, நூல் வர்த்தகத்திற்கு பெயர்போன மத்திய ஸ்தலமாகவும், நெசவு நெய்வது, நெல் அரைப்பது, எண்ணெய் பிழிவது, சாயம் அச்சு அடிப்பது முதலிய தொழிற்சாலைகள், இயந்திரசாலைகள் அதிகமாக ஆகிவிட்டன.

ஜனத்தொகை 60000க்கு குறையாது. டவுனில் மாத்திரம் 4 ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. ஈரோட்டிற்கு 10 மைல், 15 மைல், 20 மைல் தூரத்திலும் மற்றும் கோயமுத்தூரைவிட சேலத்தைவிட ஈரோடு சமீபம் என்று சொல்லும்படியான இடங்களிலுமாக சுமார் 10 ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாவற்றிற்கும் பயன்படும்படியாக ஈரோட்டில் ஒரு 2 வது தரம் (2nd grade) காலேஜ் ஒன்று கட்ட, வைக்க சகல வசதியும் இருக்கின்றன. இங்கு செல்வந்தர்களும் லட்சாதிபதிகளும் பல லட்சத்திற்கு அதிபதிகளுமாக 100க் கணக்காகவே இருக்கிறார்கள். வருஷம் 10000 முதல் 50000 ரூபாய் வரை இலாபம் சம்பாதிப்பவர்களும் அதுபோலவே இருக்கிறார்கள். வருமான வரி லிஸ்டைக் கொண்டு இதை நிர்ணயிக்கக்கூடாது. நல்ல செல்வந்தர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட இந்த ஊரில் ஒரு 2-வது தரம் காலேஜ் இல்லை என்றால் செல்வந்தர்களுக்கு புத்தி இல்லை என்று சொல்லுவதா கட்டுப்பாடு இல்லை என்று சொல்லுவதா கல்வியில் கவலை இல்லை என்று சொல்லுவதா என்றால் இவை ஒன்றும் அல்ல என்றும், எது நல்ல காரியம், எது அவசியமானகாரியம் என்ற பகுத்தறிவில்லை என்றும்தான் சொல்லுவோம்.

ஏன் எனில்,

நாட்டில் எங்கு பார்த்தாலும் மதப் பிரச்சாரக்காரர்களும், மதம் கலைகாப்பாளர்களும், பொது உடைமைக்காரர்களும், ராமராஜ்ஜியக் காரர்களும், தொழிலாளர் தலைவர்களும், சுயராஜ்ஜியக்காரர்களும் அமுக்கி விழுந்தால் தங்கள் மீது விழும்படியாகப் பெருகிவிட்டார்கள்; சன்மார்க்கக்காரர்களுக்கும், சமரசக்காரர்களுக்கும், தமிழ் இசைக்காரர்களுக்கும், புராணக்

ரோஜா முத்தையா

கலை வளர்ப்புக்காரருக்கும் அளவில்லை. கோயிலுக்குப் பல ஆயிரக் கணக்கில் பணம் செலவிட்டு வாகனங்களை முதலியவை செய்யும் உபயக்காரர்களும் ஏராளம். ஆனால் இந்த மிக்க முக்கியமான தேவையான (கல்வி) காரியத்திற்கு கவனம் செலுத்தி உதவுவதற்கு ஆள்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. கஸ்தூரிபாய் பண்டுகள், சில்லரை பணமுடிப்பு வசூல்கள் ஆகிய வசூல்களுக்கும் குறைவில்லை. க்ஷயரோக ஆஸ்பத்திரி, குஷ்டரோக ஆஸ்பத்திரி, முதலிய ஆஸ்பத்திரி தர்மங்களுக்கும் குறைவில்லை.

ஆனால் இவை ஏற்படாமல் தடுக்கும்படியாக மக்களுக்கு நல்லறிவு, நல்வாழ்க்கைமுறை முதலியவைகள் கற்பிக்க கல்வியைப் பற்றிய கவலை கொள்ள சர்க்கார்மீது குறைகூறுவதைத் தவிர காரியத்தில் செய்ய வேண்டியவர் மிகமிக அருமையாய் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் அறிவீனமையா ஆரிய சூழ்ச்சியா என்பது யோசிக்கத் தக்கதாகும்.

இவ்வூர் (ஈரோட்டுச்) செல்வர்கள் மாரியம்மன் பண்டிகைக்கு இவ்வருஷம் 4000, 5000 வசூலித்து நாட்டாண்மைக்காரர்களாக இருந்து நடத்தினார்கள். இந்த மாரியம்மன் உற்சவம் காட்டுமிராண்டிகள் கால உற்சவம். இந்தக் கொண்டாடும் நாட்டாண்மைக்கார பெரிய மனிதர்கள் இந்தக் காலேஜ் பற்றிய கவலை 2 மாதத்துக்கு எடுத்துக் கொண்டால் குறைந்தது 2 லட்ச ரூபாய் சேர்த்து காலேஜ் ஆக்கி விடலாம். ஏன் இதைச் சொல்லுகிறோம் என்றால் இந்த வருஷம் காலேஜில் சேர மக்கள், பெற்றோர்கள்; பிள்ளைகள் பட்டபாடு அவ்வளவு பரிதபிக்கத்தக்கதாகும்.

யார்பேரையாவது காலேஜுக்கு கொடுப்பதாயிருந்தால் அவர்களிடமிருந்து 25000க்கு குறைவில்லாமல் 50000 ரூபாய் வரை முதலில் நன்கொடை வசூலிக்கலாம் என்பது நமது துணிவாகும். எனவே ஈரோட்டுப் பிரமுகர்கள் சிந்திப்பார்களா?

## திருச்சி சு. ம. கூட்டம்

திருச்சி டவுன் ஹால் மண்டபத்தில் 17-6-45-ம் தேதியில் நடந்த சுயமரியாதைத் தோழர்கள் கூட்டத்தில் சு. ம. சங்கத்திற்கு அங்கத்தினர்களைச் சேர்க்கவும், ஸ்தாபனங்கள் அமைக்கவும், ஜில்லா வாரியாகக் கீழ்க்கண்ட தோழர்கள் தலைவருக்கு உதவி செய்யவும், ஆதரவளிக்கவும், தீவிர முயற்சி எடுக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

திருச்சி டி. பி. வேதாச்சலம், தஞ்சை கே. கே. நீலமேகம், சென்னை ஆ. ஷண்முகம், செங்கல்பட்டு டி. பி. எஸ். பொன்னப்பன், சேலம் கே. ஜெகதீசன், கோவை ஈ. வெ. கி. சம்பத்து, ராமநாதபுரம் எஸ். ராமசுப்பய்யா, மற்ற ஜில்லாக்களுக்கும் பெயர்கள் குறிப்பிட்டுத் தெரிவித்துவிடும்படியும் மற்றும் அவசியமானால் இவரை கேட்டுக்கொள்ளும்படியும் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டார் என்றும், கேட்டுக் கொண்டவர்கள் கூடிய சீக்கிரம் கூடுமான அங்கத்தினர்களைச் சேர்த்து ஸ்தாபனங்களை அமைத்து மாநாடு நடத்த அனுகூலமாக இருக்கும்படியாய் தெரிவிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள் என்றும் தோழர் டி. பி. வேதாசலம் எழுதுகிறார்.

## பொய்க் கூற்றுக்கு மறுப்பு

10-6-45-ம் தேதி 'சண்டே அப்சர்வர்' பத்திரிகையில் திருச்சி பீமநகரில் 4-6-45-ம் நாள் திராவிடர் கழகம் கூடியதாக வெளிவந்த செய்தி பொய்க்கூற்றென்றும், அதில் கண்டமாதிரி எத்தகைய தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லையென்றும், இச்செய்தி முழுப் பொய்யென்றும், கே. ராஜகோபாலன் பி. ஏ., என்ற பெயரால் திருச்சி பீமநகரிலோ, அதற்கருகிலோ திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர் இல்லையென்றும் திருச்சி பீமநகர் திராவிடர் கழக தலைவர் தோழர் பி. ராஜூவும், காரியதரிசி தோழர் டி. வி. கோவிந்தராசனும் தெரிவிக்கின்றனர்.

## "திராவிட நாட்டுப் பிரிவினை"

ஆனைமலை, ஜூன் 24-ம் தேதி தோழர்கள் மிராண்டா— கஜேந்திரன் வரவை முன்னிட்டு, அன்று மாலை திராவிடர் கழகத்தின் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஊர்வலம் நடத்தப்பெற்றது. பின்னர் தோழர் ஏ. கே. முகம்மது ஹனீப் தலைமையில் தோழர் எஸ். கஜேந்திரன் பி. ஏ., "திராவிட நாட்டுப் பிரிவினை" எனும் பொருள் பற்றிப் பேசுகையில், ஆரியருக்கும், திராவிடருக்கும் உள்ள இயற்கை வித்தியாசங்களையும், அந்த இரு இனத்தாரும் ஒன்றாக முடியாத நிலையையும் விளக்கிப் பேசினார்.

நன்றிகூறலுடன் இரவு 8-10 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது. (ந. நிருபர்)

## புதுக்கோட்டை அறிவு வளர்ச்சிக் கழகம்

இக்கழகத்தின் முதலாவது ஆண்டு விழாவை ஜூன் மாதம் கொண்டாட முடிவு செய்திருந்ததை தலைவர்களின் செளகரியத்தை முன்னிட்டு ஜூலை மாதம் 3-வது வாரத்தில் நடைபெறுமென செயலாளர் ராம. கலியாணசுந்தரம் தெரிவிக்கின்றார்.

## அறிவிப்பு

தன்மான முறையில் திருமணஞ் செய்துகொள்ள விரும்புகிற சோழிய வேளாள வகுப்பைச் சேர்ந்த இருபாலரும் அடியிற்கண்ட முகவரிக்கு தெரிவித்தால் தக்க உதவி பெறலாம்.

கே. எஸ். சுப்பிரமணியம்,
காரியதரிசி,
சோழிய வேளாள சங்கம்,
மதராஸ்.


## ஜெயராம் காய சுத்தி லேகியம்

இரைப்பை குடல் சம்பந்தமாய் ஏற்படக்கூடிய பித்தவாயு, அஜீரணம், வயிற்றுவலி, வாந்தி, மயக்கம் முதலிய கெடுதல்களை நீக்கி மலத்தை சுகமாய்ப் பிரிக்கும். இரண்டே வேளையில் குணம்.

10சர் ரூ. 4. 5சர் ரூ. 2/2

V. P. P. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசி விஸ்வநாதர் மேலவீதி,
கும்பகோணம்

## தஞ்சைமாவட்ட திராவிட மாணவர்சுற்றுப்பிரயாணம்

தோழர்களே! கீழ்க்கண்ட நிகழ்ச்சிப்படி தோழர்களான ஈ. வெ. கி. சம்பத் அவர்களும், புலவர் குழந்தை அவர்களும் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். பின் இம்மாவட்ட கூட்டங்கள் நடத்த விரும்புபவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு லெட்டர் எழுதவும்.

நிகழ்ச்சிக் குறிப்புகள்

1-7-45 தஞ்சை
2- அடியக்கமங்கலம்
3- கீவளூர்
4- கீக்கல்
5- திருப்பூண்டி
6- நாகூர்
7- நன்னிலம்
8- திருத்துறைப்பூண்டி
9- பேளூர் உருணி
10- பட்டுக்கோட்டை
11, 12, 13 பட்டுக்கோட்டை தாலுகா.

V. S. P. யாகூப் காரியதரிசி,
சு. ம. சங்கம், விஜயபுரம்.

## திராவிடர் மாணவர் மாகாண மாநாடு

மேற்படி மாநாடு விரைவில் சென்னையில் நடைபெறும். நாளும் விபரமும் சீக்கிரமே வெளிவரும்.

## கரூரில் பொதுக்கூட்டம்

22-6-45-ந் தேதி கரூர் மார்க்கெட் மைதானத்தில் கரூர் திராவிடர் கழகத்தினர் சார்பாக திராவிடர் பொதுக்கூட்டம் தோழர் எம். கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் பெரியார் ஈ. வெ. ரா. தோழர்கள் பி. கே. அய்யர், ஈ. வெ. கி. சம்பத், நடிகர் டி. வி. நாராயணசாமி முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

## திருவளர்சோலையில் பெரியார்

திருவளர்சோலை திராவிடர் கழகத்தின் சார்பில் 3-7-45-ந் தேதி பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறும். அதுசமயம் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் மற்றும் பல தோழர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

## திராவிடர் நாடக சபா ஆரம்ப விழா

சேலம் செவ்வாய்ப்பேட்டை அருணாசல செட்டி தெருவில் திராவிடர் நாடக சபா ஒன்று ஆரம்பித்துள்ளோம். அதில் நமது இயக்க சம்பந்தமான சீர்திருத்த நாடகங்கள் நடத்துவது என்று தீர்மானித்து அதற்கு தலைவர் ஆர். வி. வரதராசுலுவும், ஆசிரியர் தோழர் கே. எஸ். ராசகோபாலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் நாடகங்கள் நடத்த ஏற்பாடு செய்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் தோழர் ஆர். வி. வரதராசலு தெரிவிக்கிறார்.

## திருத்தம்

9-6-45-ஆம் நாள் வெளியான 'குடி அரசு' 5-ஆம் பக்கம் 3-ஆம் கலத்தில் "திருச்செங்கோடு திராவிடர் கழக ஆண்டு விழாவும் பொதுக்கூட்டமும்" என்ற தலைப்பில் காணும் செய்தியின் கடைசி பாராவில் 'வி. வி. சி. ஆர். எம். ஆறுமுகம் என்றும், வி. வி. சி. பி. வி. பொன்னுசாமி என்றும் இருப்பதை வி. வி. சி. ஆர். கே. ஆறுமுகம் என்றும், வி. வி. சி. ஆர். வி. பொன்னுசாமி என்றும் திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

## புதுக்கோட்டை விதவா விவாக சங்கம்

இச்சங்கத்திடலில் தோழர் வி. பாலகிருஷ்ணன் எம். எல். சி. அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் மேற்படி சங்கத்திற்குத் தலைவராக வி. பாலகிருஷ்ணன் அவர்களையும் உபதலைவராக வி. அருணாசலத் தேவர் அவர்களையும், செயலாளர்களாக ஏ. எல். ஆறுமுகம் எம். எல் சி. ராமகலியாண சுந்தரம் அவர்களையும், 9-பேர் கொண்ட கமிட்டி அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது. காரியதரிசி வணக்கக்கூறுடன் கூட்டம் முடிவுற்றது.

## லால்குடி தாலுகா நன்னிமங்கலம் திராவிட வாலிபர் கழகம்

5வது ஆண்டு நிறைவு விழா

2-7-45 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் மேற்படி விழா கொண்டாடப்படும்.

அதுபோது தோழர்கள் திருச்சி ஜில்லா தேசியப் போர்முனை விரிவுரையாளர் தோழர் கி. வீரசாமி பி. ஏ., தோழர் ஏ. ராஜா பி. ஏ., தஞ்சைஜில்லா ஹானரரி ரெக்ரூட்டிங் ஆபீசர் எஸ். எல். மணி, 'சமரசம்' ஆசிரியர் ஜனாப் எஸ். எம். சுல்தான் பக்தாதி, ஷெடியூல்டு பெடரேஷன் பிரசிடெண்டு சிங்காரம் அவர்களும் மற்றும் பல அறிஞர்களும் விஜயம் செய்வார்கள். அதுபோது எஸ். பார்வதி அம்மையார் திராவிட முன்னேற்றப் பாடல்களைப் பாடுவார். அன்பர்கள் அனைவரும் திரளாக வர வேண்டுகின்றோம்.

மாலை 3 மணிக்கு லால்குடி ரயில்வே ஸ்டேசனிலிருந்து தலைவர் ஊர்வலம் உருவப்படம் எடுக்கப்படும்.

எஸ். சின்னையா, வரவேற்பு தலைவர்: என். எம். நாகராஜன், காரியதரிசி.

## மறைவு

காஞ்சிபுரம்

சிறந்த எழுத்தாளரும், ஆசிரியரும், சுயமரியாதைத் தீவிர வாதியுமான சி. என். ஏகாம்பரம் அவர்களின் தாயார் மறைந்ததை அறிய வருத்தத்துடன் அவருக்கும் மனோன்மணி ஏகாம்பரத்திற்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


27-6-45 முதல் எமது மகத்தான 2-வது வாரம்.
தினசரி இரவு 10-30 மணிக்கும், ஞாயிறு மாலை 7-30 மணிக்கும்
புதுவை கேப்ளே தியேட்டரில்
நாகை திராவிட நடிகர் கழகத்தாரால்,

# சாந்தா

என்னும் சமூக சீர்திருத்த நாடகம் நடைபெறும்.
டிக்கட் விகிதங்கள்:- 1வது வகுப்பு 1-8-0, 2வது வகுப்பு 1-2-0, பேக்பெஞ்சு 0-12-0, பெஞ்சு 0-8-0, பால்கனி 0-5-0, தரை 0-3-0.

D. R. Manager.

தலைவர்: R. V. கோபாலன். கதை, வசனம்: மு. கருணாநிதி.

# திருமணங்கள்

காரையார்கோவில் தோழர் சீனிவாசன் அவர்களுக்கும் தோழர் ராஜாமணி அம்மைக்கும் கும்பகோணம் ராஜா டாக்கீசில் 4-7-45ந் தேதி காலை 9-30 மணிக்கு தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ. அவர்கள் தலைமையில் பதிவு திருமணம் செய்யப்படும்.

* *

சென்னை கோடம்பாக்கம் வரதராஜ பேட்டை பொன்னுசாமி உபாத்தியாயர் தெரு 7 ெ. இல்லத்தில் 2-7-45ந் தேதி காலை 10 மணிக்கு தோழர்கள் ஈ. வெங்கடாசலத்திற்கும் ஆ. இராதாபாயுக்கும் திருமணம் நடைபெறும்.

* *

கோட்டாத்தூர் தோழர் கல்லுசாமிக்கும் தோழர் கமலத்திற்கும் 3-7-45 தேதி கோட்டாத்தூர் மணமகன் இல்லத்தில் திருமணம் நடைபெறும்.

* *

குடந்தை தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் புதல்வி தோழர் சாவித்திரி என்னும் மனோன்மணிக்கும் தோழர் கே. கணபதி அவர்கள் புதல்வன் மனோகரனுக்கும் மணமகள் இல்லத்தில் 25-6-45-ந் தேதி தஞ்சை ஜில்லா ரிஜிஸ்டிரார் அவர்களால் பதிவுத் திருமணம் செய்யப்பட்டது. இதை முன்னிட்டு 'குடி அரசு', 'திராவிட நாடு' பத்திரிகைகளுக்கு முறையே 2 ரூ. வீதம் நன்கொடையளிக்கப்பட்டது.

* *

புவனகிரி 20-6-45ல் தோழர் சிங்காரவேல் அடிகள் தலைமையில் சிதம்பரம் தாலுகா இராயநல்லூர் தோழர் பூ இரத்தினசாமி அவர்கள் மூத்தகுமாரர் தோழர் கோவிந்தசாமிக்கும், பூந்தோட்டம் தோழர் த. சாமிக்கண்ணு அவர்கள் குமாரத்தி தோழர் குஞ்சம்மாளுக்கும்; இளைய குமாரன் தோழர் கிருட்டிணசாமிக்கும் சுந்தமல்லி தோழர் மணியம் மு. கோவிந்தசாமி அவர்கள் புதல்வி தோழர் இரத்தினாயகிக்கும் மூடச் சடங்குகள் நீக்கி சீர்திருத்தத் திருமணம் நடந்தது. தோழர்கள் சம்பந்தம் கண்ணையா, கோவிந்தசாமி, காசிநாதன் முதலியவர்கள் சீர்திருத்த திருமணம் என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்கள். 'திராவிட நாடு', 'குடி அரசு' ஆகியவைகளுக்கு ரூ. 4 நன்கொடையளிக்கப்பட்டது. மணமக்களுக்கு தோழர் க. சீனிவாசனால் திருமண வாழ்த்துப்பா வாசித்தளிக்கப்பட்டது.

* *

எட்டயபுரம் திராவிடர் கழக உதவி காரியதரிசி தோழர் எஸ். முத்தையாவுக்கும் தோழர் புஷ்பாவுக்கும் அத்தைக்குடி மணமகன் இல்லத்தில் 21-6-45 திருமணம் நடந்தேறியது. இதை முன்னிட்டு மணமக்களுக்கு எட்டயபுரம் திராவிடர் கழக நண்பர்கள் வாழ்த்திதழ் வாசித்தளித்து ஓர் தேநீர் விருந்தும் நடத்தினார்கள். 'குடி அரசு' 'திராவிட நாடு' வளர்ச்சிக்காக ஒரு ரூபாய் வீதம் மணமகனால் நன்கொடை யளிக்கப்பட்டது.

* *

தோழர்கள் எம். கே. துகநாதன்—ஜெகதாம்பாள் திருமணம் 22-6-45-ந் தேதி காலை 10 மணிக்கு கரூரை அடுத்த புலியூரில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சீர்திருத்தத் திருமணம் என்பது பற்றித் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், டி. வி. நாராயணசாமி, நாவலடி முதலானவர்கள் பேசினார்கள். பெரியார் அவர்கள் திருமணம் என்பது பற்றி 2 மணி நேரம் வரை மிகத் தெளிவாக விளக்கிப் பேசினார்கள். ஈரோடு எம். கே. ஜி. நாதன் அச்சுப்பட்டரைத் தொழிலாளர்களும், மற்ற தொழிலாளர்களும், தோழர்கள் மைதீன்பாட்சா, எம். நாராயணசாமி பிள்ளை முதலியவர்களும் மணமக்களுக்குத் திருமண வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்தனர். பல அன்பர்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. மணமக்களுக்கு ஏராளமான பரிசுகள் வழங்கப்பட்டன. தலைவர்களுக்கும், மற்றுமுள்ளவர்களுக்கும் சமபந்தி விருந்தளிக்கப்பட்டது. 'குடி அரசு', 'திராவிடநாடு' ஆகிய தாள்களுக்கு ரூ 5 முறையே அளிக்கப்பட்டது.

* *

18-6-45ந் தேதி பென்னாகரம் அடுத்துள்ள பத்மசாலி மடத்தில் தோழர் எம். என். நஞ்சையா அவர்களின் தலைமையின்கீழ் வீரசைவத்தை நாயுடுகள் சமூகத்தில் நடக்குமாற்றதும் புரோகித மற்றதுமான 11-திருமணங்கள் மிக விமரிசையாய் நடைபெற்றன.

* *

தோழர் சாம்பசிவம் அவர்களுக்கும், தோழர் சரோஜா அவர்களுக்கும் 20-6-45-ந் தேதி புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் சிறப்பாக நடைபெற்றது. புரட்சிக் கவிஞர் சீர்திருத்தத் திருமணத்தின் அவசியத்தை விளக்கிப் பேசிய பின், தோழர் அன்பழகன் பி. ஏ., (Hons) அவர்கள் சுயமரியாதையையும், பெரியாரின் கருத்துக்களையும் விளக்கிப் பேசினார். பின் தோழர் சபாசபை அவர்களால் (பச்சையப்பன் கல்லூரி மாணவர்) நன்றி சொல்லப்பட்டது. இந்தத் திருமணத்திற்காக 'திராவிடநாடு', 'குடி அரசு' பத்திரிக்கைகளுக்கு முறையே ரூபாய் ஒவ்வொன்று நன்கொடையளிக்கப்பட்டது.

* *

தென்மாப்பட்டு சிதம்பரம் பிள்ளையின் புதல்வன் ஆசிரியர் ரெங்கசாமிக்கும், தம்பிபட்டி சீர்திருத்தவாதி சுப. ஆறுமுகம் பிள்ளையின் புதல்வி சாந்தமதிக்கும் 21-6-45-ல் தோழர் அ. மாணிக்கம் பிள்ளை தலைமையில் மணமகன் இல்லத்தில் சீர்திருத்த முறையில் வாழ்க்கை ஒப்பந்தம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்த்துகள், பரிசுகள் வழங்கப்பட்டன. 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ 1. நன்கொடையளிக்கப்பட்டது.

* *

நன்னிலத்தை யடுத்த திருப்புகலூரில் 24-6-45-ல் கடலூர் இரயில்வே அசிஸ்டண்ட் குட்ஸ் கிளார்க் தோழர் ஆர். சக்ரநாதன் அவர்கட்கும் இராசாமிர்தம் எனப்படும் காவேரியம்மாள் அவர்கட்கும் நன்னிலம் வட்டம் ஆவணப் பதிவு அலுவலர் தோழர் சுப்பையா அவர்கள் முன்னிலையில் பதிவுத் திருமணம் நடைபெற்றது. குடந்தை எஸ். கே. சாமி, மாயவரம் கிருட்டிணமூர்த்தி ஆகியோர் மணமக்களைப் பாராட்டிச் சொற்பொழிவாற்றினர். மணமக்கள் யாவருக்கும் நன்றி கூறினார்.

* *

17-6-45ல் பூவிருந்தவல்லிக்கடுத்த மாங்காடு கிராமம் சிவன்கோவில் தெரு தோழர் கம்பம் சம்பந்தமுதலியார் இல்லத்தில் தோழர் என். ஜி. கண்ணப்பாவுக்கும் உதயகிரி அம்மையாருக்கும் கோவூர் முனுசாமி முதலியார் அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. அப்போது பல தோழர்கள் சீர்திருத்த மணம்பற்றி சொற்பொழிவு ஆற்றினார்கள். அண்ணாமலை யூனிவர் சிட்டி சங்கீத மாணவன் தோழர் கே. புன்னியகோட்டி தமிழ் பாடல்கள் பாடினார். மாங்காடு திராவிடக் கழகத் தலைவர் எம். ஆர். கண்ணப்பன் மணமக்கள் சார்பாக நன்றி கூற திருமணம் இனிது முடிந்தது. இவ்வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவுக்காக மணமக்கள் நன்கொடையாக 'குடி அரசு'க்கு ரூ. 2 கொடுத்தார்கள்.

* *

விருதுநகர் தோழர் கந்தசாமி நாடார் அவர்கள் மகனும், ஆச்சாரி ஆட்சியில் 'இந்தி எதிர்ப்பில்' சிறை சென்ற தோழர் தங்கமுத்து அவர்களுக்கும்—அருப்புக்கோட்டை தோழர் அண்ணாமலை நாடாரவர்கள் மகள் தோழர் அருணாசலவடிவு அம்மாள் அவர்களுக்கும் 20-6-45 புதன்கிழமை அருப்புக்கோட்டையில் தொண்டர் மு. மீ. சீனிப்பாண்டியன் முன்னிலையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அதுசமயம் சுயமரியாதைத் திருமணம் என்பது பற்றி தோழர் சி. பெ. ரத்தினம், மா. சிவசாமி அவர்களும் பேசினார்கள். அதன் அறிகுறியாக 'குடி அரசு'க்கு மணமகன் அவர்களால் அன்பளிப்பு ரூ. 1. அனுப்பப் பெற்றது.

ரோஜா முத்தையா

# திராவிடக் கழகங்கள்

22-5-45-ந் தேதி கூறைநாடு திராவிடர் கழக சார்பில் மாயவரம் நகராட்சி கட்டிடத்தில் தோழர் மூவலூர் வைத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) திருமாறன், சோமுலிங்கம், பிரயாறு மா. இராமலிங்கம் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். சேலம் மாநாடு தான் சரியான பிரதிநிதித்துவமுடைய மாநாடென்றும் சென்னையில் மே 7, 8 தேதிகளில் நடைபெற்ற மாநாடு ஜஸ்டிஸ் மாநாடல்லவென்றும், சர்க்காரும் பொது மக்களும் அவர்களைக் கருதக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டதுடன் தோழர்கள் மாயவரம் (R. M. S.) டி. சின்னையா, கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., எல். எல்., ஆகியவர்கள் மறைந்ததற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

* *

வில்லாரணி திராவிட கழகத்தின் மாதாந்திர பௌர்ணமிக் கூட்டம் 26-5-45-ந் தேதி தோழர் எ. கே. ஐயர் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கா. மு. கங்காதரனார், சுப்பிரமணியம், வீ. எ. இராமசாமி, ச. சேகரன் முதலியவர்கள் பேசினார்கள். இந்நகர நெசவாளர் சங்கம் திறக்கவேண்டுமென்றும், அறிஞர் கா. சுப்ரமண்ய பிள்ளை மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பதாகவும், கவிஞர் பாரதிதாசன் நிதிக்கு உதவவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* *

கமுதி திராவிடர் கழக அமைப்புக்கூட்டம் சமீபத்தில் கூட தோழர்கள் ஆ. தங்கமாணிக்கம் தலைவராகவும், மா. த. அ. கிருட்ணசாமி செயலாளராகவும் மற்றும் 5 பேர் உறுப்பினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

சென்னை நுங்கம்பாக்கம் திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம் தோழர் பாலசுந்தரம் தலைமையில் சமீபத்தில் கூடியது. இந்தியப் போர் வீரர்களின் திறமையைப் பாராட்டியும், இந்தியப் போர் வீரர்களை விஜயலட்சுமி பண்டிட் தூற்றியதைக் கண்டித்தும், மே 7ந் தேதி சென்னையில் கூடிய கூட்டம் ஜஸ்டிஸ் கட்சிக்கூட்டமல்லவென்றும் சர்க்காரும் பொதுமக்களும் அவர்களை ஜஸ்டிஸ்கட்சியாக கருதக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* *

30-5-45ந் தேதி நடைபெற்ற திருச்சி மாவட்டம் திம்மாச்சிபுரம் க. பேட்டை திராவிடர் கழக ஆண்டுவிழாவில், மே 7, 8 தேதிகளில் சென்னையில் கூடிய போலி ஜஸ்டிஸ் கட்சியை கண்டித்தும், உள்ளூரில் மண்ணெண்ணெய் கிடைக்காமல் கஷ்டப்படும் மக்களுக்கு உடனே நிவாரணம் அளிக்குமாறு கேட்டுக்கொண்டும், கரூர் ரயில்வே ஸ்டேஷனோடு கிராமத்தை இணைக்கும் நல்ல ரோடு ஒன்றை போட்டுத் தரும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ள காரியதரிசிக்கு முழு அதிகாரம் கொடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

* *

2-6-45ந் தேதி தோழர் க. கருப்பன் தலைமையில் நடைபெற்ற திட்டக்குடி திராவிடர் இளைஞர் கழக பொதுக்கூட்டத்தில் தோழர்கள் மு. சுப்பராயன் தலைவராகவும், ரா. பூர்ணம் உபதலைவராகவும், மு. கருப்பன் காரியதரிசியாகவும், பி. பழனியாண்டி உபகாரியதரிசியாகவும், வ. அர்ச்சுனன் பொருளாளராகவும் மற்றும் 10பேர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். கழக நிர்வாக உறுப்பினர் கூட்டம் ஒவ்வொரு மாதம் 1ந்தேதி 15ந் தேதிகளில் நடத்துவது என்றும், கழகத்திற்கு கழக மெம்பர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 0-4-0 சந்தா செலுத்தவேண்டுமென்றும், இயக்கத்தாள்களை வரவழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* *

தண்டராம்பட்டு திராவிடர் கழக நிர்வாகிகள் கூட்டம் 5-6-45-ந் தேதி தோழர் ஆர். சித்தரெட்டியார் தலைமையில் நடைபெற்றது. கழக வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. சென்னையில் 7, 8-5-45-ந் தேதி நடைபெற்ற போலி ஜஸ்டிஸ் மாநாட்டை கண்டிக்கப்பட்டதுடன் உண்மையான ஜஸ்டிஸ் கட்சி திராவிடர் கழகம் தான் என்றும் சில போலிகளால் நடத்தப்பட்ட மேற்படி மாநாட்டிற்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* *

வடிப்பட்டி திராவிடர் கழகக் கூட்டம் 2-6-45ந் தேதி மைதானத்தில் தோழர் என். அப்பையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் திராவிட கழகத்திற்கு தலைவர், உபதலைவர், செயலாளர் முறையே என். அப்பையா, சீனிவாசப்பன், ஏ. ச. ஜெயசிங் முதலானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பின் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* *

சிறுகனூர் திராவிட கழக நான்காவது ஆண்டு நிறைவு விழா 7-6-45 வியாழன் இரவு 10-30 மணிக்கு திருச்சி ஜில்லா கழக காரியதரிசி தோழர் டி. பி. வேதாசலம் தலைமையில் ஆரம்பமாயிற்று. தலைவர் முன்னுரைக்குப் பின்னர் தோழர் ந. ராஜகோபால் "திராவிடர் நிலை" என்பது பற்றிப் பேசினார். பின்னர் கழக காரியதரிசி எஸ். முத்து வெங்கடாசலம் ஆண்டு அறிக்கையை வாசித்தார், தலைவர் முடிவுரைக்குப் பின்னர், சிறுகனூர் திராவிட கழக காரியதரிசி எஸ். முத்து வெங்கடாசலம் நன்றி கூறுதலுடன் இரவு 1 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது. புது ஆண்டு நிர்வாகக் குழுவினர்கள்:

தலைவர்:- ரா. ரெங்கசாமி, உபதலைவர்:- மு. துரைசாமி, காரியதரிசி:- எஸ். முத்து வெங்கடாசலம், உபகாரியதரிசி:- கே. நடராஜன், மற்றும் ஆறு பேர்கள் நிர்வாக உறுப்பினர்கள்.

* *

10-6-45-ல் கள்ளிகுளம் இந்து பாடசாலையில் தோழர் எ. சேகுமுகம்மது அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். வி. டேவிஸ், எம். சங்கரபாண்டியன், பி. எம். ஜெயசிங், என். துரைசாமி முதலியோர் திராவிடர் பிரச்சினை குறித்து விரிவுரை ஆற்றினர். 7, 8-5-45-ல் சர் சண்முகம் செட்டியார் தலைமையில் சென்னையில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி மாநாடு போலித் தன்மையானதென்றும் அது திராவிட மக்களுக்கு தீங்கு இழைப்பதென்றும் ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டது.

* *

7-6-45ல் புதுப்பாளையத்தில் திராவிடக் கழகம் ஒன்று தோழர் எ. பி. ஜனார்த்தனம் எம். ஏ. அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. மேற்படி கழகத்திற்கு தோழர்கள் பி. ஆர். குப்புசாமி தலைவராகவும், எம். நாராயணசாமி உபதலைவராகவும், எம். நடேசன் செயலாளராகவும், கே. கோபால்சாமி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மற்றும் 10பேர் நிர்வாக உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

கோரநாடு: மாயவரம் கொரநாடு திராவிடர் கழக சார்பில் 11-6-45ந் தேதி தோழர் தீ. ப. நாதன் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் காஞ்சி கல்யாணசுந்தரனார் "திராவிடர் தொழிலாளர் கடமை" என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார். தோழர்கள் இளம்வழுதி, கோவிந்தராச ஆகியவர்கள் பேசினார்கள்.

* *

நாட்டாம்பள்ளி: - திராவிடர் கழக

அமைப்புக்கூட்டம் தோழர் ஜி. பழனிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஷை கழகத்தை தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் திறந்துவைத்தார். அடுத்தபடியாக ஷை கழகத்திற்கு தோழர்கள் எச். எஸ். ரங்கசாமி தலைவராகவும், ஆர். வெங்கிடராமன் உபதலைவராகவும், பி. சாமிநாதன் காரியதரிசியாகவும், நா. முனுசாமி, ராஜநாயகம், எம். சாமி ஆகியவர்கள் உபகாரியதரிசிகளாகவும், கந்தசாமி பொருளாளராகவும், மற்றும் 7 பேர் கமிட்டி மெம்பர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். பின் தோழர் எச். எஸ். ரங்கசாமி அவர்கள் தலைமையில் சேலத்தில் நடந்த தீர்மானங்களை ஆதரித்தும் சென்னை போலி ஜஸ்டிஸ் மாநாட்டு நடவடிக்கைகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

*　　*

வடஆர்க்காடு:

11-6-45ந்தேதி ஜோலார்பேட்டையில் ஐயர் பாடசாலை மைதானத்தில் மிட்டாதார் வி. பார்த்தசாரதி அவர்கள் தலைமையில் ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ, புலவர் நன்னன் சமூக சீர்திருத்தமும் சென்னை சர்க்காரின் யுத்த பிற்கால ஐந்தாண்டு திட்டமும் என்பதைப் பற்றி வெகு விமரிசையாகப் பேசினார்கள். தலைவர் முடிவுரையில் சுயமரியாதைக் கட்சியின் எதிர்காலத் திட்டத்தை விளக்கியும் இந்து மதத்தைக் கண்டித்தும் மிக விரிவாகவும் விமரிசையாகவும் ஆணித்தரமாகவும் உற்சாகத்துடனும் பேசி முடித்தார்.

*　　*

12-6-45-ந் தேதி வாணியம்பாடியில் பாலாற்றில் இந்து பள்ளிக்கூட மாணவர்களின் சார்பாக ஒரு பொதுக் கூட்டத்தில் தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., புலவர் நன்னன் சமூக சீர்திருத்தம் என்பது பற்றிப் பேசினார்கள்.

13-6-45-ல் வாணியம்பாடி கிழக்கு திராவிடர் கழகத்தின் ஆண்டு விழாவில் தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ, மட்டும் கலந்துகொண்டார். அன்று மாலை 5 மணிக்கு காதர்பேட்டை கிழக்கு திராவிடர் கழகம் ஆண்டுவிழா திருப்பத்தூர் வக்கீல் தோழர் ஏ. சு. நாச்சியப்ப கவுண்டர் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் நடந்தது. நடப்பு ஆண்டுக்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது. சங்க நோக்கம் என்பது பற்றி ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., அவர்கள் பேசி, பெரியார் படத்தைத் திறந்துவைத்தார். சென்னை சாமிநாதன் அவர்கள் பன்னீர் செல்வம் படத்தைத் திறந்துவைத்தார். தோழர் வி. எம். ராசமாணிக்கம் அவர்கள் சுயமரியாதைக் கட்சியின் நோக்கமும் அவர்கள் சேலத்தில் செய்த தீர்மானங்களும் இனி செய்யவிருக்கும் வேலைகளும் திராவிட நாட்டிற்கும் திராவிடர்களுக்கும் மிக இன்றியமையாதது என்றும், சமீபத்தில் சென்னையில் விக்டோரியா பப்ளிக் மண்டபத்தில் நடந்த கோலாகல வித்தைகளையும் சர். ஆர். கே. எஸ். அவர்கள் சுயமரியாதை இயக்கம் அரசியலில் கலந்ததால் அரசியல் கட்சி கெட்டுவிட்டது என்று பேசியதைக் கண்டித்தும் பேசினார். தோழர் ஜி. பழனிமுத்து நன்றிகூற கூட்டம் கலைந்தது.

*　　*

14-6-45 நாட்டறம்பள்ளியில் கழகத் திறப்பு விழாவும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர் வி. பார்த்தசாரதி தலைமை வகித்தார். தோழர்கள் ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., எச். எஸ். ரங்கசாமிக்கவுண்டர், ஜி. பழனிமுத்து, கந்தசாமிக்கவுண்டர், ஆர். வெங்கிடராமநாயுடு முதலியவர்கள் பேசினார்கள். நடப்பு ஆண்டுக்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

*　　*

சேலம் சுயமரியாதைச் சங்கக் கட்டிடத்தில் 3-6-45ந்தேதி டாக்டர் கே. ஆர். கோபால் அவர்கள் தலைமையில் திருஞானசம்பந்தரும் போலி பக்தர்களின் கூற்றும் தற்கால திராவிடர் கடமையும் என்ற பொருள்பற்றி தோழர்கள் சி. ஆர். நாயுடு, அறிவுடைய நம்பி, ஏ. பெருமாள், சர்வர்; கே. கே. மகாதேவன் ஆகிய தோழர்கள் மிக விரிவாகப் பேசினார்கள். திராவிடர் கழகத்திற்கு 32000க்கு மேல் உறுப்பினர்கள் சேர்ந்துவிட்டபடியால் தலைவர் பெரியார் அவர்கள் விசேஷ மாநாட்டை விரைவில் கூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது.

*　　*

குடந்தை காங்கேயன் பார்க்கில் 19-5-45-ல் தோழர் ஜீ. என். சாமி தலைமையின் கீழ் திராவிட தொழிலாளர் கூட்டம் நடைபெற்றது. தோழர் காஞ்சி கல்யாணசுந்தரனார் திராவிட தொழிலாளர் நிலை என்பது பற்றிப் பேசினார்.

*　　*

தண்டாரம்பட்டு திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 5-6-45-ந் தேதி தோழர் செ. சித்தாசெட்டியார் தலைமையில் கூடி, சென்னையில் விக்டோரியா பப்ளிக் ஹாலில் 7, 8-5-45-ந் தேதியில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி மாநாடு போலி மாநாடென்றும் அதன் நடவடிக்கைகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

*　　*

அரவக்குறிச்சி பூ. ச. தண்டாயுதபாணி, ல. சேதுராமனின் திராவிடர் இலவச வாசகசாலையின் சார்பாக 18-6-45-ந் தேதி மாலை 6 மணிக்கு காதர் மைதீன் மக்களின் நாடகக் கொட்டகையில் தோழர் ஜாபர் உசேன் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத்தும், தமிழ்மணி ராசனும் "நாடும் ஏடும்," எனும் பொருள் பற்றிப் பேசினார்கள். தோழர்கள் நூர்சாமி, ல. வீராசன், ஈரோடு மாணவத் தோழர் சுப்பையன் முதலியோரும் பேசிய பிறகு, நாடகக் கொட்டகை, லைட் வசதி முதலியன செய்து கொடுத்த தோழர் தாவூது அவர்களுக்கு நன்றி கூறி கூட்டம் இரவு 10½ மணிக்கு முடிவுற்றது.

*　　*

சென்னை புதுப்பேட்டை திராவிடர் கழகத் திறப்புவிழா 10-6-45ந் தேதி சென்னை புதுப்பேட்டை வாத ராஜபுரத்தில் தோழர் எம். எஸ். எம். மூசைதீன் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் திராவிடக் கழகத்தின் அவசியம் அதன் நன்மை பற்றிபேசினர். பின்னர் கழகத்திற்கு மூசைதீன் அவர்களைத் தலைவராகவும், தோழர் வி. எஸ். கிருஷ்ணசாமியை காரியதரிசியாகவும், தோழர் ரங்கநாதன் அவர்களை உதவிக் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுத்தனர். அடுத்த கூட்டத்தில் மற்ற நிர்வாக உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பார்கள்.

(தொடர்ச்சி 2ம் பக்கம் பார்க்க)


## பகுத்தறிவு வால்யூம்

### விற்பனைக்குத் தயார்

35 ஜூன் முதல் மார்ச்சு 36 வரை 9, 10 மாதங்கள் கொண்டது விலை ரூ. 1-8-0, 1-10-0, புக்போஸ்டில் அனுப்ப 6 அணா, ரிஜிஸ்டர் புக்போஸ்டு செலவு அணா 9.

1937ஆம் வருட பகுத்தறிவு பைண்டு வால்யூம் விற்பனைக்குத் தயார் ஆகிவிட்டது. ('37ஜூன் முதல் '38ஏப்ரல் வரையுள்ள புத்தகங்களில் '37 மே மாதம் புத்தகம் நீக்கி 11-புத்தகங்கள்கொண்ட வால்யூம்) விலை ரூ. 1-12-0. தபால் செலவு வேறு. (புக்போஸ்டில் அனுப்ப 6அணா. ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 9-அணா)

'38 மே முதல் '39 ஜனவரி முடிய 9-மாதங்கள் கொண்ட பைண்டு வால்யூமுக்கு விலை ரூ. 1-8-0. தபால் செலவு தனி. (புக்போஸ்டில் அனுப்ப 5-அணா. ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 8-அணா)

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42 Cutchery street, Erode.